# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## பணிந்து கொள்ளமாட்டோம் என்ற மனிதர்கள்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

நேபுகாத்நேச்சார் ராஜா ஒரு பிரமாண்டமான பொற்சிலையை செய்தான். அது தலையிலிருந்து கால்வரை பொன்னாக இருந்தது. பொன்னால் செய்யப்பட்ட தன்னுடைய ராஜ்ஜியம் நிலைக்காது என்று சொன்னதை ராஜா ஒரு வேளை மறந்துபோயிருக்கலாம். ஒருவேளை சிலையை முழுவதுமாக பொன்னினால் செய்தால், சொப்பனத்திலே தனக்கு சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையானது நிறைவேறாமல் போய்விடலாமென அவன் நினைத்திருக்கலாம்.



ராஜாவின் சேவகன் ஒருவன் ஜனங்களுக்கு கட்டளையை வாசித்தான். "... நீங்கள் எல்லோரும் தாழவிழுந்து பொற்சிலையை வணங்கவேண்டும் ... யாரெல்லாம் தாழவிழுந்து பொற்சிலையை வணங்கவில்லையோ அவர்கள் எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்."



ராஜாவின் கட்டளைக்கு மூன்று பேர் தவிர எல்லோரும் கீழ்ப்படிந்தார்கள்.  அந்த மூன்று பேரும் எபிரேயர்கள்.



அவர்கள் தானியேலின் மூன்று நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, தானியேல் அந்த நேரத்தில் அங்கேயில்லை போலும், ஆனாலும் அவன் அங்கே இருந்தால் கூட மனிதன் ஒரு விக்கிரகத்தை அவன் வணங்கமாட்டான்.



ராஜா தானியேலையும்,
அவனுடைய நண்பர்களையும்
அதிகமாக விரும்பினதாலே
ராஜாவின் ஞானவான்கள்
பொறாமையாயிருந்தார்கள்.



ஆகையால் அவர்கள் சொன்னார்கள், "பாபிலோன் மாகாணத்தின் மேல் நீர் நியமித்த மூன்று மனிதர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இருக்கிறார்கள். இந்த மனிதர்கள், ஓ ராஜாவே, அவர்கள் உமக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் உம்முடைய தேவர்களையோ அல்லது நீர் உண்டாக்கின பொற்சிலையையோ அவர்கள் சேவிக்கவில்லை."





ராஜா நேபுகாத்நேச்சார்
கோபத்தில் நிறைந்தான்.
அவன் அவர்களை
எச்சரித்தான், "நீங்கள்
வணங்காமற்போனால் எ
ரிகிற அக்கினி சூளையின்
நடுவில் போடப்படுவீர்கள்.
அப்பொழுது என்னுடைய
கையிலிருந்து எந்த
தேவன் உங்களை
விடுவிப்பார்கள்?"

ராஜா ஒரு பெரிய தவறை செய்கிறான். அவன் உண்மையான தேவனுக்கு சவால் விடுகிறான். அந்த மூன்று எபிரேய மனிதர்களும் சிலையை வணங்குவது தேவனுடைய கட்டளைக்கு எதிரானது என்று அறிந்திருந்தார்கள். அவர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் தேவனை நம்பினதாலே, அவர்கள் ராஜாவுக்கு பயப்படவில்லை.



அந்த மூன்று மனிதர்களும் ராஜாவுக்கு பதில் வைத்திருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், "நாங்கள் வணங்குகிற தேவன் எங்களை எரிகிற அக்கினி சூளையிலிருந்து காப்பாற்ற வல்லவராயிருக்கிறார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதில்லை என்கிறது ராஜாவாகிய உமக்கு தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்."



ராஜாவாகிய
நேபுகாத்நேச்சார் மிகவும்
சீற்றம் கொண்டான்.
அவன் அக்கினி
சூளையை சாதாரணமாக
சூடாக்குவதைவிட
அதிகமாக சூடாக்கும்படி
ராஜா கட்டளையிட்டான்.
ஆனாலும் அந்த மனிதர்கள்
பணியவில்லை.



சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை
கட்டி எரிகிற அக்கினி
சூளையின் நடுவில்
போடும்படி
தன்னுடைய



படையின்
பலம்வாய்ந்த
மனிதர்களைப்பார்த்து
ராஜா கட்டளையிட்டான்.

அக்கினி சூளையானது அதிக வெப்பமாக இருந்ததினாலே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை தூக்கி எ ரிந்தவர்கள் சூட்டினாலே தாக்கப்பட்டு இறந்துபோனார்கள்.



ராஜா பத்திரமாக தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். மூன்று மனிதர்கள் எரிகிற அக்கினி சூளையின் நடுவில் எ ரியப்பட்டதை ராஜா பார்த்திருந்தான். ஆனால் இப்போது அதை மாத்திரம் அவன் பார்க்கவில்லை.



ராஜா நேபுகாத்நேச்சார் ஆச்சரியப்பட்டான்!
"மூன்று புருஷரையல்லவா
கட்டுண்டவர்களாக
அக்கினியிலே
போடுவித்தோம்?"
என்று தன்னுடைய
உதவியாளர்களிடம்
கேட்டான்.
"ஆமாம்" என்று
பதிலளித்தார்கள்.



அவன் சொன்னான், "நாலு பேர் விடுதலையாய் அக்கினியின் நடுவில் உலாவுகிறதை காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது!"



அப்பொழுது ராஜா எரிகிற அக்கினிச்சூளையின் வாசலண்டைக்கு வந்து, "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, உன்னதமான தேவனுடைய தாசர்களே,வெளியே வாருங்கள்" என்று சத்தமிட்டு கூப்பிட்டான்.

பின்பு சாத்ராக், மேஷாக், மற்றும் ஆபேத்நேகோ, அக்கினி சூளையின் நடுவிலிருந்து வெளியே வந்தார்கள்.



எல்லோரும் சுற்றி கூடிவந்து அந்த மூன்று எபிரேய மனுஷர்களை பரிசோதித்துப்பார்த்தார்கள். அக்கினியின் வல்லமையால் அவர்களை தாக்க முடியவில்லை என்று அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் முடிகள் கறுகவில்லை மற்றும் அவர்கள் துணிகள் எரிந்துபோகவுமில்லை. அவர்களிடத்தில் தீயின் மணம் கூட வீசவில்லை.



என்ன நடந்தது என்று நேபுகாத்நேச்சார் தெளிவாக உண்ர்ந்த போது, ராஜா ஒரு புத்தியுள்ள காரியத்தை செய்தான், அவன் ஜெபித்து மற்றும் சொன்னது, "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம், ஏனெனில் அவர்கள் தேவனை நம்பினதாலே அவர் தமது தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார்."



பணிந்து கொள்ளமாட்டோம் என்ற மனிதர்கள்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

தானியேல் 3

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16